BRITISH COUNCIL

மாணவர் மற்றும் பெற்றோர் நடத்தை விதிமுறைகள்

# பிரிட்டிஷ் கவுன்ஸிலில் கற்றல் மையத்தின் இணையவழி வகுப்புகள்

ஆங்கில மற்றும் இடைநிலை மாணவர்களுக்கான ஆங்கில கற்கை நெறிகள்

# இணையவழிப் பாடங்கள்

இணையவழி வகுப்பறை ஊடாக மாணவர்கள் சிறந்த கற்றல் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அவர்கள் தமது தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் ஆங்கிலத்தைப் பேசிப் பழகவும் திறன்களை விருத்தி செய்யவும் வழமையான வகுப்புகளின் மூலம் பெறுவதைப் போன்ற முன்னேற்றத்தைப் பெறவும் உதவும் வகையிலேயே இணையவழிப் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# இணையவழி வகுப்புகளுக்கான நடத்தை விதிமுறைகள்

இணையவழி வகுப்புகளில் பங்குபற்றும் மாணவர்கள் தமது நடத்தைக்குத் தாமே பொறுப்பாக இருப்பதுடன், நேருக்குநேர் வகுப்புகள் தொடர்பில் கடைப்பிடித்த அதே கொள்கையைப் பின்பற்ற வேண்டும். மற்றவர்களை இம்சைப்படுத்துவதற்கு அறவே இடமளிக்கப்பட மாட்டாது என்ற பிரிட்டிஷ் கவுன்ஸிலின் கண்டிப்பான நிலைப்பாடும் இதில் உள்ளடங்கும்.

இந்த எதிர்பார்ப்புகளுக்கு மேலதிகமாக, பின்வரும் விதிகளை அனுசரிக்கும்படியும் நாம் மாணவர்களைக் கேட்கின்றோம்.

## சாதகமான நடத்தை

இணையவழி வகுப்புகளில் பங்குபற்றும் ஒவ்வொருவரும் மற்றவர்களை மரியாதையாக நடத்த வேண்டும். பின்வருமாறு நடந்துகொள்ள எப்போதும் முயல வேண்டுமென நாம் சகல மாணவர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்:

- நட்புறவாக இருங்கள்
- அனைவரையும் உள்ளடக்குங்கள் - செயற்பாடுகளில் இணைந்துகொள்ள மற்றவர்களையும் அழையுங்கள்
- ஈடுபடுங்கள் - ஆசிரியர் பங்குபற்றச் சொல்லும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்
- ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களுக்குச் செவிமடுத்து, அவற்றைப் பின்பற்றுங்கள்
- மற்றவர்களுக்கு செவிமடுங்கள். அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பளியுங்கள்
- கமராவின் முன் நீங்கள் மட்டுமே இருப்பதை உறுதிப்படுத்துங்கள்
- உங்களுக்குத் திருப்தி இல்லையெனின், ஆசியரிடமிருந்து உதவியைக் கேளுங்கள் அல்லது நம்பிக்கையான வளர்ந்தவர் ஒருவரிடம் கூறுங்கள்
- கமராவை எப்போதும் செயல்நிலையில் வைத்திருங்கள்

## அவசியமான ஏனைய நடவடிக்கைகள்

- மாணவர்கள் தமது முழுமையான முதற் பெயரும் குடும்பப் பெயரின் முதலெழுத்தும் தெரியத்தக்கதாக (உதா. Juan R அல்லது Kim Y) தமது கணக்கை ஏற்படுத்த வேண்டும். வகுப்புப் பதிவேட்டிலுள்ள பெயரை ஒத்திருக்காத பெயரைக் கொண்டிருக்கும் மாணவர்கள் வகுப்புக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

## தடைசெய்யப்பட்ட நடத்தை

பின்வரும் நடத்தைகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது:

- மற்றவர்களை இம்சை செய்தல்
- வேண்டுமென்றே கீழ்ப்படியாமை
- பாகுபாடு காட்டுதல்
- எந்த மொழியிலாவது தகாத வார்த்தைகளைப் பயன்படுத்துதல்
- பாடநேரத்தில் தொலைபேசியைப் பயன்படுத்துதல்
- அழைப்புகளைச் சீர்குலைப்பதற்கு மென்பொருளை அல்லது கருவிகளைப் பயன்படுத்துதல்
- தகாதவை என்று கருதப்படும் விடயங்களைப் பகிர்ந்துகொள்ளுதல்
- இணையவழி வகுப்புகளைப் ஒலி-ஒளி பதிவு செய்தல்
- மாணவர் தவிர்ந்த ஏனையோர் கமராவில் தோன்றுவதற்கு இடமளித்தல்
- மாணவர் தவிர்ந்த ஏனையோர் இணையவழி வகுப்பிலுள்ள மற்றைய மாணவர்களுடன் தொடர்புகொள்ள இடமளித்தல்

மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்கத் தவறினால், சம்பந்தப்பட்ட மாணவர் விலக்கப்படலாம் அல்லது இடைநிறுத்தப்படலாம்.

# இணையவழி வகுப்புகளை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டுதல்

## ஆயத்தமாகுங்கள்!

### பார்க்கும் மற்றும் கேட்கும் வசதி

இணையவழிப் பாடங்களில் பூரணமாகப் பங்குபற்ற மாணவர்களிடம் கமரா இருக்க வேண்டும். நீங்கள் எப்போதாவது Skype, FaceTime அல்லது வேறேதும் வீடியோ அழைப்பு செயலியை பயன்படுத்தியிருந்தால் இதுவும் அது போன்ற ஓர் அனுபவமே. வகுப்பு நேரம் முழுவதும் ஆசியர்களுடன் அல்லது மற்றைய மாணவர்களுடன் பேசுவதற்கு மைக்ரபோன் கொண்ட இயர்ஃபோன் / ஹெட்ஃபோன் உங்களுக்குத் தேவை.

*பாடம் ஆரம்பமாவதற்கு முன் உங்கள் வீடியோ மற்றும் மைக் சரியாகச் செயற்படுகின்றனவா என்று பரீட்சித்துப் பாருங்கள்.*

## அமைதியான ஓர் இடத்தில் இருங்கள்

நீங்கள் கற்கும் இடத்தை நீங்களே தெரிவு செய்துகொள்ள முடிவது, இணையவழிப் பாடங்களின் ஒரு பெரிய அனுகூலமாகும். எனினும், சிறந்த அனுபவத்தைப் பெறுவதற்கு மற்றவர்களின் இடைஞ்சல் அல்லது சத்தம் இல்லாத ஓர் இடத்தை தெரிவு செய்யுங்கள். இடையீடுகள் மற்றும் தொடர்ச்சியாக அங்குமிங்கும் நடந்து திரிதல் உங்கள் கற்றல் அனுபவத்தைப் பாதிக்கும்.

ஃபோன் அல்லது டப்லட் ஒன்றைவிட desktop அல்லது laptop ஒன்றைப் பயன்படுத்துவது நல்லது.

## முறைப்படி இணைந்திருங்கள்

உங்களுக்கு ஒரு நிலையான இணையத்தள இணைப்பு அவசியமாகும். இணைப்பு சரியாக இருக்காவிட்டால், மற்றைய மாணவர்களையோ ஆசிரியரையோ பார்ப்பதற்கும் அவர்கள் பேசுவதைக் கேட்பதற்கும் நீங்கள் சிரமப்படுவீர்கள்.

- போதனை நிலையம் வழங்கும் பாடங்களின்போது, எனது பிள்ளையினால் இணையத்தளம் மற்றும் மன்றங்கள் பயன்படுத்தப்படுவதைக் கண்காணிக்க முடியும் என்பதை நான் அறிவேன்.
- மாணவர்கள் மற்றும் அலுவலர்களிடம் இருந்தான தகவல்கள், உருவப்படங்கள் மற்றும் / அல்லது வீடியோ பதிவுகளைப் பயன்படுத்த எனக்கு அனுமதி கிடையாது என்பதை நான் அறிவேன். தனியுரிமை மற்றும் பதிப்புரிமை நிபந்தனைகளுக்கு இணங்கியொழுக இவ் விதிகள் அவசியம் என்பதையும் நான் அறிவேன்.

☐ இப் பெட்டியினுள் அடையாளமிடுவதன் மூலம் இந்த விதிகளை அனுசரித்து நடக்க நானும் எனது பிள்ளையும் இணங்குகின்றோம்.